**CHENNAI** TUESDAY 07 MARCH 2017

THE NEW INDIAN EXPRESS

# 'Good research vital to ease human suffering'

EXPRESS NEWS SERVICE
@ Puducherry

JIPMER Director, Dr S C Parija, emphasised on the importance of good research to alleviate human suffering.

Speaking at the first National Seminar on Translational Research (NSTR) organised at JIPMER by the Department of Biochemistry, JIPMER and the Indian Academy of Biomedical Sciences, Parija said that in recent times, JIPMER had emerged as an important centre for research, across multiple medical disciplines.

Translational research is defined as an interdisciplinary branch of the biomedical field, which applies findings from basic science to enhance human health and well-being. It aims to "translate" findings in fundamental research into medical practice and meaningful health outcomes.

Translational research implements a "bench-to-bedside" approach, from laboratory experiments through clinical trials to point-of-care patient applications model, harnessing knowledge from basic sciences to produce new drugs, devices, and treatment options for various ailments.

The event was aimed at increasing the awareness among students, residents and research scholars of the importance of translational research.

The event was well attended with over 160 registered delegates from various institutes in Puducherry and Tamil Nadu.

Dr. Medha Rajappa, Additional Professor of Biochemistry shed further light on translational research and its relevance in clinical practice.

This was followed by guest lectures by eminent speakers in the field of translational research including Professor Alpana Sharma and Professor Savita Yadav from All India Institute of Medical Sciences, New Delhi, Professor Abbas Ali Mahdi and Dr. Mohammad Kaleem Ahmad from King George's Medical University, Lucknow.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
செவ்வாய்க்கிழமை, 07 மார்ச், 2017

# ஜிப்மரில் தேசிய கருத்தரங்கு

புதுச்சேரி, மார்ச்.7–

ஜிப்மரில் ஆய்வக பரிசோதனைகள், மருத்துவ பரிசோதனைகளின் மூலம் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பது தொடர்பான தேசிய கருத்தரங்கு நடந்தது. உயிர் வேதியியல் துறையின் மூத்த பேராசிரியர் டாக்டர் எம்.ஜி.ஸ்ரீதர் வரவேற்று பேசினார். நிகழ்ச்சியில் ஜிப்மர் இயக்குனர் சுபாஷ் சந்திர பரிஜா கலந்துகொண்டு இந்தியாவில் தற்போதைய நிலை பற்றியும், ஒரு நல்ல ஆராய்ச்சி மூலம் மனித உடல்நலம் எப்படி மேம்படுகிறது? என்பது பற்றியும் விளக்கினார்.

நிகழ்ச்சியில் ஜிப்மர் மருத்துவ கண்காணிப்பாளர் பாலசந்தர், முதல்வர் சுவாமிநாதன், உள்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் உயிர் வேதியியல் துறையின் துணை பேராசிரியர் மேதாராஜப்பா, பேராசிரியர் அல்பனா ஷர்மா, டாக்டர்கள் சவிதா யாதவ், ராஜேந்திர பிரசாத், மகேஷ்வரன் மணி, ரமேஷ், சுரேந்திரன் ஆகியோர் பேசினார்கள். முடிவில் பேராசிரியர் சாக்ரியா பாபி நன்றி கூறினார்.

தினகரன்
செவ்வாய்க்கிழமை, 07 மார்ச், 2017

# டிரான்ஸ்லேஷனல் ஆராய்ச்சி கருத்தரங்கம்



புதுச்சேரி ஜிப்மரில் நடந்த டிரான்ஸ்லேஷனல் ஆராய்ச்சி பற்றிய தேசிய கருத்தரங்கில் இயக்குனர் எஸ்.சி.பரிஜா பேசினார்.

## ஜிப்மர் மருத்துவமனையில் நடந்தது

புதுச்சேரி, மார்ச் 7: டிரான்ஸ்லேஷனல் ஆராய்ச்சி என்பது பயோமெடிக்கல் துறையின் பல்வேறு கிளையாகும். இது மனித உடல் நலம் மேம்பட அடிப்படை அறிவியல் கண்டுபிடிப்புகளை உபயோகித்தல் பற்றியதாகும்.

இந்நிலையில் புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் உயிர் வேதியியல் துறை மற்றும் இந்தியன் அகாடமி ஆப் பயோமெடிக்கல் சயின்ஸ் அமைப்பு சார்பில் டிரான்ஸ்லேஷனல் ஆராய்ச்சி பற்றிய முதல் தேசிய கருத்தரங்கம் நடந்தது.

உயிர் வேதியியல் துறை மூத்த பேராசிரியர் ஸ்ரீதர் வரவேற்றார். ஜிப்மர் இயக்குனர் சுபாஷ் சந்திர பரிஜா கருத்தரங்கை தொடங்கி வைத்தார். அப்போது, இந்தியாவில் தற்போதைய ஆராய்ச்சி நிலை பற்றியும், ஒரு நல்ல ஆராய்ச்சி மூலம் மனித உடல் நலம் எப்படி மேம்படுகிறது என்பது பற்றியும் பேசினார்.

சிறப்பு விருந்தினர்களாக மருத்துவ கண்காணிப்பாளர் பாலச்சந்தர், ஜிப்மர் முதல்வர் சுவாமிநாதன், இந்தியன் அகாடமி ஆப் பயோமெடிக்கல் சயின்ஸ் பொதுச்செயலாளர் அலிமஹதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

டிரான்ஸ்லேஷனல் ஆராய்ச்சி மற்றும் அதை எவ்வாறு மருத்துவ நடைமுறையில் செயல்படுத்துவது எனபது குறித்து ஒருங்கிணைப்பு செயலாளர் மேதாராஜப்பா பேசினார்.

பேராசிரியர் அல்பனா ஷர்மா மற்றும் புதுடெல்லி அகில இந்திய மருத்துவ அறிவியல் துறை பேராசிரியர் சவிதா, டாக்டர்கள் மோஹமத் கலிம் அஹமத், ராஜேந்திர பிரசாத் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் பேசினர். டாக்டர் சுரேந்திரன், சந்தியா ஆகியோர் தலைமையில் மூலக்கூறு உயிரியல் என்ற தலைப்பில் குழு விவாதம் நடந்தது. இதில் மனிதனின் நோயை எவ்வாறு தடுப்பது, கண்டறிதல், சிகிச்சை அளிப்பது பற்றி விவாதித்தனர். இதில் புதுச்சேரி மற்றும் தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்களில் பணிபுரியும் 160 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். உயிர் வேதியியல் துறை தலைவர் சாக்ரியா பாபி நன்றி கூறினார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்
செவ்வாய்க்கிழமை, 07 மார்ச், 2017

# ஜிப்மரில் பயோ-மெடிக்கல் கருத்தரங்கம்



பயோ-மெடிக்கல் கருத்தரங்கில் பங்கேற்ற பேராசிரியருக்கு பரிசு வழங்கும் ஜிப்மர் இயக்குநர் எஸ்.சி.பரிஜா.

**புதுச்சேரி, மார்ச் 6:** புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் தேசிய பயோ-மெடிக்கல் கருத்தரங்கம் திங்கள்கிழமை நடைபெற்றது.

உயிர்வேதியியல் துறை மூத்த பேராசிரியர் எம்.ஜி.ஸ்ரீதர் வரவேற்றார். பயோ-மெடிக்கல் விஞ்ஞானியும், இயக்குநருமான சுபாஷ் சந்திரபரிஜா கருத்தரங்கை தொடக்கி வைத்துப் பேசுகையில், இந்தியாவில் தற்போதைய ஆராய்ச்சி நிலை குறித்தும், ஒருநல்ல ஆராய்ச்சி மூலம் மனித உடல்நலம் எப்படி மேம்படுகிறது என்பது பற்றியும் எடுத்துரைத்தார்.

மருத்துவக் கண்காணிப்பாளர் ஜே. பாலசந்தர், முதல்வர் ஆர்.பி. சுவாமிநாதன், இந்தியன் அகாதெமி ஆஃப் பயோ-மெடிக்கல் சயின்ஸஸ் பொதுச் செயலர் அப்பாஸ் அலிமஹதி பங்கேற்றனர்.

மாணவர்கள், பயிற்சி மருத்துவர்கள், ஆராய்ச்சி அறிஞர்களுக்கு டிரான்ஸ்லேஷனல் ஆராய்ச்சி பற்றிய கருத்துகளை ஊக்குவித்தல் முக்கிய நோக்கமாகும்.

இதில், புதுச்சேரி மற்றும் தமிழகத்தின் பல்வேறு நிறுவனங்களில் பணிபுரியும் 160 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

உயிர்வேதியியல் துறை துணைப் பேராசிரியர் மேதா ராஜப்பா, பேராசிரியர் அல்பனா ஷர்மா, மற்றும் பேராசிரியர் சவிதா யாதவ், ஹமத் (கிங் ஜார்ஜ் மருத்துவ பல்கலைக்கழகம், லக்னோ) , மருத்துவர்கள் ராஜேந்திர பிரசாத் (அண்ணாமலை பல்கலை.), மகேஸ்வரன் மணி (புதுச்சேரி பல்கலை.) ரமேஷ் (மகாத்மா காந்தி மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்), அ.சுரேந்திரன் (ஜிப்மர்) ஆகியோர் பங்கேற்று பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர். துறைத் தலைவர் சாக்ரியா பாபி நன்றி கூறினார்.